පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක 79

බලශක්ති අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රාජ්‍ය ගිණුම් කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා
සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු මුදල් විෂයභාර
අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන
පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 79

நிறுவனத்தின் பெயர். வலுசக்தி அமைச்சு

*பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை
தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிதி எனும்
விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும்
மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும்
பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.
அஇஉஎக்பமதநடனறளஏஐஊஈஔஒஓவஙலரயநஞஷஃஎ/கக*

Parliamentary Series No 79

Name of the institution: Energy Ministry

**Submission of observations of Hon. Minister in charge of the subject of Finance and
actions taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in
terms of Standing Order No. 119(4)**

அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்@ராட்சி அதிகாரசபைகளின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் செயற்திறன் குறித்த நிகழ்நிலை தகவல் முகாமைத்துவ அமைப்பு மூலமான மதிப்பீடு - 2022 நிதியாண்டு தொடர்பான தற்போதைய முன்னேற்றத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்- 79

நிறுவத்தின் பெயர் - வலுசக்தி அமைச்சு (மின்சக்தி பிரிவு)

தொடர் இல	குழுவால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	கூறப்பட்ட விடயங்கள் தொடர்பான விளக்கங்கள்
01	வருடாந்த செயற் திட்டம் தயாரிக்கப்படவில்லை.	➢ 2022 ஆம் ஆண்டுக்கான செயற் திட்டத்தை 2021.12.15 ஆம் திகதிக்கு முன்னர் உடனடியாக அனுப்புமாறு, அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கும், அமைச்சின் உள்ளக கிளைகளுக்கும் 2021.12.03 ஆம் திகதி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. ➢ முழுமையான செயற் திட்டத்தின் நகல் வரைவு 2021.12.29 ஆம் திகதி செயலாளரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. ➢ நகல் வரைவு சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, செயலாளரின் உத்தரவுகளின் படி அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்களுடன் கூட்டமொன்று நடத்தப்பட்டது, மேலும் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைய தேவையான செயற்பாடுகளை தெளிவாக அடையாளம் காண்பதற்கு செயற் திட்டத்தை திருத்தி அமைக்க அனைத்து கிளைகள் மற்றும் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டது. ➢ இதற்கிணங்க, உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோகக் கிளையைத் தவிர, மற்றைய அனைத்து கிளைகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்தும் பெறப்பட்ட தகவல்களுடன் புதுப்பிக்கப்பட்ட முழுமையான செயற் திட்டம், 2022.04.08 ஆம் திகதி செயலாளரின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. திருத்தங்களின் விளைவாக, 2022.04.08 ஆம் திகதி வரை இதற்காக மேலதிக நேரம் செலவிடப்பட்டது.
02	வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.	2022 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் 2021.12.15 ஆம் திகதி தயாரிக்கப்பட்டது. (இணைப்பு 01)

03	வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை, திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் 50% க்கும் குறைவாக இருந்தது.	➢ 2022 ஆம் ஆண்டில், தேவையான ஒதுக்கீடுகளை எதிர்பார்த்து பயிற்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டன; இருப்பினும், 2022 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர்களின் பயிற்சிநெறிகளுக்கு தலைப்பு இலக்கம் 2401 இன் கீழ் எந்த ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. எனவே, பயிற்சித் திட்டங்களை திட்டமிட்டபடி செயற்படுத்த முடியவில்லை. ➢ மேலும், வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளுக்கு வெளியே செலவுகளைச் செய்யக்கூடாது என்று ஜனாதிபதி செயலகத்தின். PS/SB/Circular/10/2022 ஆம் இலக்கமிடப்பட்ட 2022.08.15 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை கூறுகின்றது. ➢ மேலும், அந் நேரத்தில் காணப்பட்ட கோவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலையின் காரணமாக திட்டமிடப்பட்ட பயிற்சி நெறிகள் முறையாக செயற்படுத்தப்படவில்லை. ➢ மேற்கூறப்பட்ட காரணங்களால், உத்தியோகத்தர்களுக்கான பயிற்நெறிகளை திட்டமிட்டபடி மேற்கொள்ள முடியவில்லை

பொறியியலாளர். குமார ஜெயகொடி
வலுசக்தி அமைச்சர்

அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்@ராட்சி அதிகாரசபைகளின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் செயற்திறன் குறித்த நிகழ்நிலை தகவல் முகாமைத்துவ அமைப்பு மூலமான மதிப்பீடு - 2022 நிதியாண்டு தொடர்பான தற்போதைய முன்னேற்றத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்- 79

நிறுவத்தின் பெயர் - வலுசக்தி அமைச்சு (மின்சக்தி பிரிவு)

<table>
<tr><th>தொடர் இல</th><th>குழுவால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்</th><th>கூறப்பட்ட விடயங்கள் தொடர்பான விளக்கங்கள்</th></tr>
<tr><td>01</td><td>இடர் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் வைக்கப்படவில்லை.</td><td>2022 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் இடர் பதிவேடு தயாரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் வைக்கப்படும்.</td></tr>
<tr><td>02</td><td>அரசாங்கத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் சம்பந்தப்பட்ட விபத்துகள் தொடர்பாக நிதியியல் விதிமுறைகளின்படி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.</td><td>
➢ தினசரி மோட்டார் வாகன பதிவு அட்டவணைகள் (running charts) மற்றும் மாதாந்த செயற்திறன் சராம்சங்களை அரசு கணக்காய்வு பிரிவுக்கு அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
<table>
<tr><th>தொடர் இல</th><th>வாகன இல</th><th>இழப்பு (ரூ)</th><th>முன்னேற்றம்</th></tr>
<tr><td>1</td><td>KJ - 6282</td><td>1,603.68</td><td>F.R. 109 இன் படி கணக்குப் புத்தகங்களிலிருந்து இழப்புகள் ஏற்கனவே பதிவழிப்பு செய்யப்பட்டுள்ளன.</td></tr>
<tr><td>2</td><td>PF - 5094</td><td>16,000.00</td><td>F.R. 109 இன் படி கணக்குப் புத்தகங்களிலிருந்து இழப்புகள் ஏற்கனவே பதிவழிப்பு செய்யப்பட்டுள்ளன.</td></tr>
<tr><td>3</td><td>PE - 9461</td><td>23,352.24</td><td>F.R. 109 இன் படி கணக்குப் புத்தகங்களிலிருந்து இழப்புகள் ஏற்கனவே பதிவழிப்பு செய்யப்பட்டுள்ளன.</td></tr>
<tr><td>4</td><td>CAF - 5016</td><td>1,170.70</td><td>F.R. 109 இன் படி கணக்குப் புத்தகங்களிலிருந்து இழப்புகள் ஏற்கனவே பதிவழிப்பு செய்யப்பட்டுள்ளன.</td></tr>
<tr><td>5</td><td>PA - 1700</td><td>8,000.00</td><td>F.R. 109 இன் படி கணக்குப் புத்தகங்களிலிருந்து இழப்புகள் ஏற்கனவே பதிவழிப்பு செய்யப்பட்டுள்ளன.</td></tr>
<tr><td>6</td><td>KL - 9507</td><td>627,009.56</td><td>இழப்பீடு தொடர்ந்து தவணைகளில் செலுத்தப்படுகிறது. இதற்கிணங்க, ரூ. 306,526.00 நிலுவையில் உள்ளது.</td></tr>
<tr><td>7</td><td>KF - 1999</td><td>61,402.61</td><td>அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது..</td></tr>
<tr><td>8</td><td>PF - 5094</td><td>24,200.00</td><td>F.R. 109 இன் படி கணக்குப் புத்தகங்களிலிருந்து இழப்புகள் ஏற்கனவே பதிவழிப்பு செய்யப்பட்டுள்ளன.</td></tr>
<tr><td>9</td><td>CAF - 5016</td><td>40,362.93</td><td>ரூ.10,052.01 தொகை ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளது, மீதி ரூ.,310.92 ஐ 6</td></tr>
</table>
</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td><table>
<tr><td></td><td></td><td></td><td>சம தவணைகளில் செலுத்துவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>10</td><td>KR - 5515</td><td>73,019.27</td><td>F.R. 109 இன் படி கணக்குப் புத்தகங்களிலிருந்து இழப்புகள் ஏற்கனவே பதிவழிப்பு செய்யப்பட்டுள்ளன.</td></tr>
<tr><td>11</td><td>PF - 5094</td><td>60,300.00</td><td>அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது..</td></tr>
</table></td></tr>
<tr><td>03</td><td>வழங்கப்பட்ட பயிற்சி நெறிகளின் எண்ணிக்கையில், திட்டமிடப்பட்ட பயிற்சி நெறிகள் 50% க்கும் குறைவாகவே இருந்தது.</td><td>➢
➢ 2022 ஆம் ஆண்டில், தேவையான ஒதுக்கீடுகளை எதிர்பார்த்து பயிற்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டன; இருப்பினும், 2022 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர்களின் பயிற்சிநெறிகளுக்கு தலைப்பு இலக்கம் 2401 இன் கீழ் எந்த ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. எனவே, பயிற்சித் திட்டங்களை திட்டமிட்டபடி செயற்படுத்த முடியவில்லை.

➢ மேலும், வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளுக்கு வெளியே செலவுகளைச் செய்யக்கூடாது என்று ஜனாதிபதி செயலகத்தின். PS/SB/Circular/10/2022 ஆம் இலக்கமிடப்பட்ட 2022.08.15 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை கூறுகின்றது.

➢ மேலும், அந் நேரத்தில் காணப்பட்ட கோவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலையின் காரணமாக திட்டமிடப்பட்ட பயிற்சி நெறிகள் முறையாக செயற்படுத்தப்படவில்லை.

மேற்கூறப்பட்ட காரணங்களால், உத்தியோகத்தர்களுக்கான பயிற்நெறிகளை திட்டமிட்டபடி மேற்கொள்ள முடியவில்லை</td></tr>
<tr><td>04</td><td>கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் செயற்படுத்தப்படவில்லை.</td><td>➢ பதவிகளுக்கான வெற்றிடங்கள்
• பிரதிப் பணிப்பாளர் (பெறுகை) பதவியைத் தவிர குறிப்பிடப்பட்ட அனைத்து வெற்றிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. மேற்கூறப்பட்ட வெற்றிடம் அமைச்சிற்கு அவசியமான பதவியாக இருப்பதால், அதற்கான உத்தியோகத்தரை வழங்குமாறு கோரி,. MOE/ADM/HR/2/5/6/(V) ஆம் இலக்கமிடப்பட்ட 2025.10.02 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் பொது நிர்வாக அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டது.

➢ 2.1 வருமான முகாமைத்துவம்
• 2023ஜனவரி 01 ஆம் திகதயில் இருந்து செயற்படும் வகையில், அப்போது இருந்த அனைத்து அனுமதிப்பத்திர கட்டணங்களும், அதாவது உராய்வுநீக்கி எண்ணெய், தார், கப்பல் எரிபொருள், ஜெட் A1 விமான எரிபொருள் ஆகியவற்றிற்கான அனுமதிப்பத்திர கட்டணங்கள் 20% அதிகரிக்கப்பட்டன (2023</td></tr>
</table>

		பாதீடு முன்மொழிவு 35.1 இன் படி, 2020 முதல் 2022 வரை 03 ஆண்டுகளுக்கு திருத்தப்படாத கட்டணங்கள் மற்றும் கட்டணங்களில் 20% அதிகரிப்பை செயற்படுத்துவதன் கீழ்) • நாட்டில் பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, விநியோகம் மற்றும் வழங்கல் பிரிவின் கீழ் சினோபெக் எனர்ஜி லங்கா (தனியார்) லிமிடெட் மற்றும் ஆர்.எம். பார்க்ஸ் (தனியார்) லிமிடெட் நிறுவனங்களுக்கு புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. அதன்படி, 2023 ஆம் ஆண்டு முதல் நான்கு நிறுவனங்களிடமிருந்து வருடாந்த அனுமதிப்பத்திர கட்டணம் இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்கள் வசூலிக்கப்பட்டது. • மேலும், 2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து, நாட்டில் உராய்வுநீக்கி எண்ணெய் இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, வழங்கல் மற்றும் விநியோகத்திற்காக 10 அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டன. இதன் மூலம், அரையாண்டுக்கு ரூ.21,360,000 வசூலிக்கப்படுகிறது. • மேலும், விமான எரிபொருள் (ஜெட் A1) வர்த்தகத்திற்கான அனுமதிபத்திரங்களை வழங்குவது ஆரம்பிக்கப்பட்டது மற்றும் இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. இதற்காக, ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் ஆண்டுக்கு USD 10,000 பதிவு கட்டணம் பெற்றுக்கொள்ளப்படுகிறது. • உராய்வுநீக்கி எண்ணெய், தார், கப்பல் எண்ணெய் மற்றும் விமான எரிபொருள் (ஜெட் A-1) போன்ற பெற்றோலிய பொருட்களுக்கான கொள்கை கட்டமைப்பு இதுவரை கிடைக்கவில்லை, மேலும் இந்த பொருட்கள் தொடர்பான கொள்கைகளை வகுப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதற்கிணங்க, எதிர்காலத்தில் இவ் பொருட்கள் தொடர்பான நடவடிக்கைகளை சரியான முறையில் நெறிப்படுத்த முடிவதோடு, வருமானத்தை அதிகரிப்பதற்கும் வழிவகுக்கும்.

- **3.2 கடமைகளை நிறைவேற்றத் தவறுதல்**

எரிபொருள் விநியோகத்தின் தரத்தை உறுதி செய்வதற்கான கொள்கை திட்டங்களை வகுத்து கண்காணிப்பதது அமைச்சின் பொறுப்பாகும், மேலும் அமைச்சின் கீழ் இயங்கும் மூன்று நிறுவனங்களான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் மற்றும் இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவை தொடர்புடைய நோக்கங்களின் கீழ் கருத்திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்துகின்றன. இருப்பினும், லங்கா இந்தியன் ஒயில் கம்பனியுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்றன, மேலும் அவற்றில் நேரடியாக தலையிட அமைச்சிற்கு திறன் இல்லை. எவ்வாறாயினும், லங்கா இந்தியன் ஒயில் கம்பனி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் மற்றும் இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய அனைத்து நிறுவனங்களுக்கும், 2023 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இரண்டு நிறுவனங்களான சினோபெக் மற்றும் ஆர்.எம். பார்க்ஸ் ஆகியவற்றுக்கும் தேசிய அளவிலான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டு வருகிறது. இருப்பினும், எரிசக்தி தொழிற்துறைக்கு பொறுப்பான அமைச்சு தற்போது போதுமான உத்தியோகத்தர்கள் மற்றும் வளங்கள் இன்மையால் இவ் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை முறையாக செயற்படுத்துவதில் பாதிப்பு ஏற்படுவதால், இவ் நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு ஒரு சுயாதீன ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தை நிறுவுவதற்கான தேவையை அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்தகைய நிறுவனத்தை நிறுவுவதற்கான தேசிய அளவிலான தீர்மானங்களை எடுக்கும் பணியில் அமைசசு தற்போது ஈடுபட்டுள்ளது.

- **3.3 கருத்திட்டங்களை பூர்த்திசெய்யாமல் இடைநடுவில் கைவிடுதல்**

முத்துராஜவலவிலிருந்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் வரையிலான விமான எரிபொருள் குழாய் பாதையை அமைப்பதற்கான இரண்டாவது கேள்விமனுக் கோரல் மேற்கொள்ளப்பட்டு, கேள்விமனுக்கள் 2025 நவம்பர் 14 ஆம் திகதி திறக்கப்பட்டன. அமைச்சரவைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை காலக்கெடுவின் படி, மதிப்பீட்டு செயல்முறை முடிவுற்றதும், ஒப்பந்தம் ஏப்ரல் 2026 இல் வழங்கப்படும், மேலும் நிர்மாணப் பணிகள் ஒக்டோபர் 2028 க்குள் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது

➢ **3.4 கருத்திட்டத்தை செயற்படுத்துவதில் உள்ள தாமதங்கள்**

(அ) இவ் கருத்திட்டத்துடன் தொடர்புடைய நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. நில உரிமையாளர்கள் மீதான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன, மேலும் தொடர்புடைய அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) 5 ஏக்கர் நிலங்கள் ஆய்வு செய்யப்பட்டு காணி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளன. 18 ஏக்கர் நிலங்கள் ஆய்வு செய்யப்பட்டு, நில உரிமையாளர்கள் தொடர்பான விசாரணைகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. தொடர்புடைய அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

(இ) இவ் ஒப்பந்தம் 2022.03.24 ஆம் திகதி M/s Prime Engineering நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இதற்கிடையில், ஒப்பந்ததாரரால் விலை உயர்வு கோரப்பட்டது, மேலும் விலை உயர்வு குழு மற்றும் பொறியியல் திட்ட மீளாய்வுக் குழுவின் பரிந்துரையுடன் முன்மொழியப்பட்ட விலை உயர்வுக்கு நிறுவனத்தின் இபணிப்பாளர் சபையின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க, உள்ளக மிதக்கும் கூரைகளை வழங்கி நிறுவி பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொண்டு கரும்திட்டம் நிறைவடைந்துள்ளது. தாங்கி இல. 04, 2023.11.17 ஆம் திகதி அன்று நிறைவடைந்தது மற்றும் தாங்கி இல. 05, 2024.04.06 ஆம் திகதி அன்று செயற்பாட்டுக்கு ஒப்படைக்கப்பட்டது.)

(ஈ) ஏப்ரல் 2022 முதல் ஏப்ரல் 2023 வரை நாட்டுக்கு குறுக்கேயான குழாய் திட்டத்தை செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பின்னர் நாட்டின் நிதி நெருக்கடி காரணமாக இடைநிறுத்தப்பட்டது. இதற்கு பதிலாக, “கொலன்னாவை எண்ணெய் முனையத்திலிருந்து கொழும்பு துறைமுகம் வரையான குழாய் பாதை” (KHPP) கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. KHPP கருத்திட்டத்திற்கான (கொலன்னாவை முதல் கொழும்பு துறைமுகம் வரையான குழாய் பாதை கருத்திட்டம்) அமைச்சரவை ஒப்புதல் 17.11.2025.11.17 ஆம் திகதி பெறப்பட்டது மற்றும் தேவையான பெறுகை ஆவணங்களை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

	அனைத்து அரசு உத்தியோகத்தர்களினதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிவிப்புகள் சமர்ப்பிக்கப்படவில்லை.	2022 ஆம் ஆண்டில் 08 பதவிநிலை உத்தியோகத்தர்கள் தங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்துள்ளனர்.

பொறியியலாளர். குமார ஜெயகொடி
வலுசக்தி அமைச்சர்

Annex 01

(14)

Ministry of Power

15 DEC 2021

Planning Division

Internal Memo

From : Additional Secretary (Admin & Procurement)

To : Director General (Planning)

Subject : Procurement Plan - 2022

File No : PE/AD/02/Pro. Plan/Budget Doc. - 2022

Date : 15.12.2021

This refers to your internal memo dated 03.12.2021 on the above matter.

Accordingly, I am sending herewith the Procurement Plan - 2022 for necessary action please.

DD/P

15/12/21

Ministry of Power
Procurement Plan - 2022

Administration and Establishment Services

Rs "000

Programme/Activity		Budget Estimates (Rs.'000)	Q1			Q2			Q3			Q4		
			J	F	M	A	M	J	J	A	S	O	N	D
Supplies	Stationery and Office Requisities	7,000	900			1,350			2,250			2,500		
Acquisition of Capital Assets	Furniture & Office Equipment	500	-			200			-			300		
	Plant, Machinery & Equipment	500	-			200			-			300		

....

Prepared By :- W.A.D.S.D Chamara
Development Officer

....

Checked By :- L.G.T. Kumari
Development Officer

....

Authorized By :- D.P. Wickramasinghe
Additional Secretary

....

Approved By :- Wasantha Perera
Secretary

Copies :- 1. Public Service Commission, Secretary
2. Auditor Deneral's Department, Auditor Deneral
3. Department of Public Finance, Director General

Wasantha Perera
Secretary
Ministry of Power

Ministry of Power
Procurement Plan - 2022

Minister's Office

Rs "000

Programme/Activity		Budget Estimates (Rs.'000)	Q1			Q2			Q3			Q4		
			J	F	M	A	M	J	J	A	S	O	N	D
Supplies	Stationery and Office Requisities	750			100			150			250			250
Acquisition of Capital Assets	Furniture & Office Equipment	800			-			400			-			400
	Plant, Machinery & Equipment	1,200			200			200			600			200

....
Prepared By :- W.A.D.S.D Chamara
Development Officer

....
Checked By :- L.G.T. Kumari
Development Officer

....
Authorized By :- D.P. Wickramasinghe
Additional Secretary

....
Approved By :- Wasantha Perera
Secretary

Copies :- 1. Public Service Commission, Secretary
2. Auditor Deneral's Department, Auditor Deneral
3. Department of Public Finance, Director General

Wasantha Perera
Secretary
Ministry of Power